# 2010 -ம் ஆண்டிற்கான இரண்டாம் நிலை (ஆண்/பெண்) காவலர்கள், இரண்டாம் நிலை (ஆண்/பெண்) சிறைக்காவலர்கள் மற்றும் தீயணைப்பாளர்கள் (ஆண்கள்) பதவிகளுக்கான பொதுத் தேர்வு (தேர்வு குறியீட்டு எண் : 2)

## விளம்பர எண் : 210

I) இந்தியக் குடியுரிமையுடைய கீழ்க்காணும் தகுதி பெற்ற ஆண்/பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து இரண்டாம் நிலைக் காவலர்கள், இரண்டாம் நிலைச் சிறைக்காவலர்கள் மற்றும் தீயணைப்பாளர்கள் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. **விண்ணப்பங்கள் தமிழகத்தில் உள்ள 236 குறிப்பிட்ட தபால் நிலையங்களில் கிடைக்கும்.** தபால் நிலையங்களின் விவரங்களை இக்குழுமத்தின் www.tn.gov.in/tnusrb இணையதளத்தில் பார்த்து தெரிந்து கொள்ளவும்.

II) **பதவிகளின் மொத்த எண்ணிக்கை: 10112+ 5** ST Back log

| பதவி | பிரிவு | காலிப் பணியிடங்கள் | | மொத்தம் | ஊதிய விகிதம் |
|---|---|---|---|---|---|
| | | ஆண்கள் | பெண்கள் | | |
| இரண்டாம் நிலைக் காவலர்கள் | மாவட்ட/மாநகர சேமப்படை | 1750 | 750 | 2500 | ரூ. 5200-20200 + தர ஊதியம் ரூ 1900 |
| | தமிழ்நாடு சிறப்புக் காவல் படை | 4550 | 1950 | 6500 | ரூ. 5200-20200 + தர ஊதியம் ரூ 1900 |
| இரண்டாம் நிலைச் சிறைக்காவலர்கள் | | 457 | 30 | 487 | ரூ. 5200-20200 + தர ஊதியம் ரூ 1800 |
| தீயணைப்பாளர்கள் | | 625 + 5 ST Backlog | - | 625 + 5 ST Backlog | ரூ. 5200-20200 + தர ஊதியம் ரூ 1800 |
| **மொத்தம்** | | 7382 + 5 ST Backlog | 2730 | 10112 + 5 ST Backlog | |

III) a) 9000 இரண்டாம் நிலைக் காவலர்கள் தேர்வில் 5% அதாவது 450 பணியிடங்கள் விளையாட்டு வீரர்களுக்கான ஒதுக்கீட்டின் கீழ் இத்தேர்வில் நேரடியாக நிரப்பப்படும்.
b) மேலே குறிப்பிட்டுள்ள இரண்டாம் நிலை சிறைக்காவலர் தேர்விற்கான காலிப்பணியிடங்கள் மற்றும் தீயணைப்பாளர்கள் ஆண்கள் தேர்விற்கான காலிப் பணியிடங்களில் விளையாட்டு வீரர்களுக்கான ஒதுக்கீடு நீங்கலானது.
c) இரண்டாம் நிலை சிறைக்காவலர்கள் தேர்வில், விளையாட்டு வீரர்களுக்கான பணியிடங்கள் விளையாட்டு வீரர்களுக்கான ஒதுக்கீட்டின் கீழ் சிறைத்துறை மூலம் தனியாக பின்னர் நிரப்பப்படும்.
d) தீயணைப்பாளர்கள் தேர்வில், விளையாட்டு வீரர்களுக்கான பணியிடங்கள் விளையாட்டு வீரர்களுக்கான ஒதுக்கீட்டின் கீழ் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மூலம் தனியாக பின்னர் நிரப்பப்படும்.

IV) a) மாவட்ட/ மாநகர சேமப்படை மற்றும் தமிழ்நாடு சிறப்பு காவல் படைக்கு 5% விளையாட்டு வீரர்களின் ஒதுக்கீட்டின் கீழ் தேர்வு செய்யப்படுபவர்கள் தமிழ்நாடு சிறப்பு காவல் படையில் முதல் 10 ஆண்டுகள் பணியமர்த்தப்படுவர்.
b) தமிழ்நாடு சிறப்பு காவல் படைக்கு தேர்வு செய்யப்படுபவர்கள் அனைவரும் அப்படையில் முதல் 10 ஆண்டுகள் பணியமர்த்தப்படுவர்.

V) இரண்டாம் நிலைக் காவலர்களின் மொத்த காலிப் பணியிடத்தில் 10% காவல்துறையைச் சேர்ந்த களப்பணியாளர்கள் மற்றும் காவல்துறை அமைச்சுப் பணியாளர்களை சார்ந்துள்ளோர்களை கொண்டு நிரப்பப்படும்.
இரண்டாம் நிலை சிறைக் காவலர்களின் மொத்த காலி பணியிடத்தில் 10 %, சிறைத்துறைச் சேர்ந்த களப்பணியாளர்கள் மற்றும் அமைச்சுப்பணியாளர்களை சார்ந்தோர்களை கொண்டு நிரப்பப்படும்.
தீயணைப்பு மற்றும் மீட்பு பணித்துறையைச் சேர்ந்த தீயணைப்பாளர்களின் மொத்த காலிப் பணியிடத்தில் 10% தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறையைச் சேர்ந்த களப்பணியாளர்கள் மற்றும் அமைச்சு பணியாளர்களை சார்ந்துள்ளோர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

VI) தற்போது அமலில் உள்ள அரசாணையின் அடிப்படையில் வகுப்புவாரி இட ஒதுக்கீடு (பொதுப் போட்டி - 31%, பிற்படுத்தப்பட்டோர் - 26.5%, பிற்படுத்தப்பட்டோர் (இஸ்லாமியர்) - 3.5%, மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் - 20%, ஆதிதிராவிடர் - 15%, ஆதிதிராவிடர் (அருந்ததியர்) - 3% மற்றும் பழங்குடியினர் - 1%) கடைப்பிடிக்கப்படும்.

VII) 1) 01.07.2010 அன்று 18 வயது நிறைவு பெற்றவராக இருக்க வேண்டும். (30.06.1992 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பிறந்திருக்க வேண்டும்).
2) 24 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும். (01.07.1986 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பிறந்திருக்க வேண்டும்).
3) **பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர் மரபினர் வகுப்பினைச் சார்ந்தவர்கள்** : 01.07.2010 அன்று 18 வயது நிறைவு பெற்றவராகவும் 26 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும் (அதாவது 01.07.1984 அன்றோ அதற்குப் பின்னரோ பிறந்திருக்க வேண்டும்).
4) **ஆதி திராவிடர் / பழங்குடியினர் வகுப்பினைச் சார்ந்தவர்கள்** : 01.07.2010 அன்று 18 வயது நிறைவு பெற்றவராகவும் 29 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். (அதாவது 01.07.1981 அன்றோ அதற்குப் பின்னரோ பிறந்திருக்க வேண்டும்).
5) (i) **முன்னாள் இராணுவத்தினர்** : 01.07.2010 அன்று 45 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும் (அதாவது 01.07.1965 அன்றோ அதற்குப் பின்னரோ பிறந்திருக்க வேண்டும்).
(ii) முன்னாள் இராணுவத்தினர் : இராணுவப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு இந்த அறிவிக்கை வெளிவந்த தேதியில் மூன்றாண்டு நிறைவு செய்யாதவர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.
(iii) இராணுவத்தில் வாகன ஓட்டுனர் (Driver), தானியங்கி கம்மியர் (Auto Mechanic), தானியங்கி மின் வினைஞர் (Auto Electrician) மற்றும் படைகலன் பழுது பார்ப்போர் (Armourers) ஆக பணிபுரிந்தோருக்கு எழுத்துத் தேர்வு மட்டுமே நடைபெறும்.
6) **ஆதரவற்ற விதவைகள்** : எந்த வகுப்பைச் சார்ந்தவராக இருந்தாலும் 01.07.2010 அன்று 18 வயது நிறைவு அடைந்தவராகவும், 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். (அதாவது 01.07.1975 அன்றோ அதற்குப் பின்னரோ பிறந்திருக்க வேண்டும்).
7) **கல்வித் தகுதி :** பழைய பாடத்திட்டத்தின் படி எஸ்.எஸ்.எல்.சி. அல்லது புதிய பாடத்திட்டத்தின் படி 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

VIII) **உடல் அளவுகள்**
**ஆண் 1) உயரம்** குறைந்த அளவு 170 செ.மீ இருக்க வேண்டும். ஆதி திராவிடர் /பழங்குடியினர் உயரம் குறைந்த அளவு 167 செ.மீ இருக்க வேண்டும்.
2) மார்பளவு அனைத்து வகுப்பினருக்கும் சாதாரண நிலையில் குறைந்த அளவு 81 செ.மீ இருக்க வேண்டும். மூச்சடக்கிய நிலையில் குறைந்த அளவு 5செ.மீ., மார்பு விரிவாக்கம் (Expansion) இருக்க வேண்டும்.
**பெண்கள் 1) உயரம்** குறைந்தளவு 159 செ.மீ இருக்க வேண்டும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் குறைந்தளவு 157 செ.மீ இருக்க வேண்டும்.

IX) விளையாட்டுக்கான ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் (ஆண்/பெண்) பொது விண்ணப்பதாரர்களைப் போலவே அனைத்துத் தகுதிகளும் பெற்றிருக்க வேண்டும். அத்துடன் 14 அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் ஏதேனும் ஒன்றிலோ அல்லது அதற்கு மேற்பட்ட விளையாட்டுகளிலோ பங்கேற்றதற்கான படிவம் I, படிவம் II அல்லது படிவம் III-ஐப் பெற்றிருக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டிகளின் விபரம் இக்குழுமத்தின் இணையதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

X) Ward cum dependent ஒதுக்கீட்டின் கீழ் a) மகன், b) திருமணமாகாத மகள், c) சட்டப்படி தத்தெடுக்கப்பட்ட மகன், d) சட்டப்படி தத்தெடுக்கப்பட்ட திருமணமாகாத மகள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

XI) தெரிவு செய்யப்பட்ட அஞ்சல் நிலையங்களில் இருந்து ரூ. 30 /- க்கு விண்ணப்ப படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். OMR விண்ணப்பப்படிவங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

XII) விண்ணப்பதாரர்கள் தேர்வுக் கட்டணம் ரூ. 130 /-ஐ அஞ்சலகத்தில் செலுத்தி, அதற்கான இரசீதைப் பெற்று பூர்த்தி செய்த OMR விண்ணப்பத்தில் ஒட்டி அனுப்ப வேண்டும்.

XIII) விண்ணப்பங்கள், விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் கடைசி தேதிக்குள் அல்லது அதற்கு முன்னரோ இக்குழும அலுவலகத்தை வந்தடைய வேண்டும்.

XIV) எழுத்துத் தேர்விற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் 80 மதிப்பெண்களில்
(a) General Knowledge - 50 மதிப்பெண்கள் (Objective Type Question) (b) Psychology - 30 மதிப்பெண்கள் (Objective Type Question) என்று பிரிக்கப்படும்.
(b) எழுத்து தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களில் அதிகபட்ச மதிப்பெண்களின் அடிப்படையில் மொத்த காலியிட எண்ணிக்கைக்கு ஏற்றவாறு வகுப்பு வாரி விகிதாச்சாரப்படி 5 மடங்கு விண்ணப்பதாரர்கள் மட்டும் அடுத்தக்கட்ட தேர்வான அசல் சான்றிதழ்களைச் சரிபார்த்தல், உடல் கூறு அளத்தல். உடல் தகுதித் தேர்வு மற்றும் உடல் திறன் போட்டிகளுக்கு அழைக்கப்படுவார்கள்.
(c) ஆண் விண்ணப்பதாரர்கள் 1500 மீட்டர் ஓட்டத்தினை 7 (ஏழு) நிமிடங்களில் முடித்தவர்கள் மட்டுமே உடல் திறன் (Physical Efficiency Test) போட்டிக்கு அனுமதிக்கப்படுவர்.
(d) பெண் விண்ணப்பதாரர்கள் 400 மீட்டர் ஓட்டத்தினை 2 (இரண்டு) நிமிடங்களில் முடித்தவர்கள் மட்டுமே உடல் திறன் (Physical Efficieny Test) போட்டிக்கு அனுமதிக்கப்படுவர்.
(e) உடல் திறன் போட்டிகளில் ஆண்களுக்கு கயிறு ஏறுதல், நீளம் தாண்டுதல் (அல்லது) உயரம் தாண்டுதல், 100 மீட்டர் ஓட்டம் (அல்லது) 400 மீட்டர் ஓட்டம், பெண்களுக்கு நீளம் தாண்டுதல், கிரிக்கெட் பந்து எறிதல் (அல்லது) குண்டு எறிதல், 100 மீட்டர் ஓட்டம் (அல்லது) 200 மீட்டர் ஓட்டம் ஆகிய போட்டிகள் நடத்தப்படும்.

XV) எழுத்துத் தேர்வு, உடல் திறன் போட்டி மற்றும் சிறப்பு மதிப்பெண் ஆகியவற்றில் பெறும் மொத்த உயர்ந்தபட்ச மதிப்பெண்களின் அடிப்படையில், காலியிடங்களுக்கு ஏற்ப வகுப்புவாரி விகிதாச்சாரத்தின்படி மாவட்ட/ மாநகர சேமப்படை, தமிழ்நாடு சிறப்பு காவல் படை, இரண்டாம் நிலைச் சிறைக்காவலர்கள் மற்றும் தீயணைப்பாளர்கள் பதவிக்கு முறையே தேர்வு செய்யப்பட்டு பின்னர் மருத்துவத் தேர்வு மற்றும் காவல் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

XVI) இத்தேர்விற்கான மதிப்பெண்கள் விவரம் : மொத்த மதிப்பெண்கள் 100 (1) எழுத்துத் தேர்வு : 80 மதிப்பெண்கள் , (2) உடல் திறன் போட்டி : 15 மதிப்பெண்கள், (3) NCC, NSS, விளையாட்டுச் சான்றிதழ்களுக்கான சிறப்பு மதிப்பெண்கள் : 5.

XVII) இத்தேர்வுக்குரிய அனைத்து தேவையான விவரங்களையும் விண்ணப்பத்துடன் கிடைக்கும் தகவல் சிற்றேட்டை படித்து தெரிந்து கொள்ளலாம். விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கு முன்பு தகவல் சிற்றேட்டினை கவனமாக படித்து அதில் குறிப்பிட்டுள்ள அறிவுரைகளின்படி பூர்த்தி செய்ய வேண்டும்.

XVIII) இந்த விளம்பரமும் மற்ற விபரங்களும் இக்குழுமத்தின் www.tn.gov.in/tnusrb என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

XIX) **முக்கிய தேதிகள் :**

| | | | |
|---|---|---|---|
| 1 | தபால் நிலையங்களில் விண்ணப்பங்கள் கிடைக்கும் நாள் | 10.05.2010 | |
| 2 | விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் | 15.06.2010 | மாலை 5.45 மணி |
| 3 | எழுத்துத் தேர்வு நடைபெறும் நாள் | 08.08.2010 | காலை 09.00 மணி |

தலைவர்
தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்,
சென்னை - 600 002.